## மெட்ரோ ரயில் பணி நிறைவு

# பெரியமேட்டில் ஒரு வழிச்சாலை இரு வழிச்சாலையாக மாற்றம்

### போக்குவரத்து போலீசார் அறிவிப்பு

சென்னை, ஏப். 15: சென்னை மெட்ரோ ரயில் கட்டுமான பணிக்காக, கடந்த 2012ம் ஆண்டு செப்டம்பர் 16ம் தேதி முதல் பெரியமேடு ராஜா சர் முத்தையா சாலையில், ஈ.வெ.ரா. சாலை சந்திப்பிலிருந்து பெரியமேடு மசூதி பாயின்ட் வரை மட்டும் வாகனங்கள் அனுமதிக்கப்பட்டு ஒருவழிப்பாதையாக செயல்பட்டு வந்தது.

பெரியமேடு மசூதி பாயின்டிலிருந்து ஈ.வெ.ரா சாலை சந்திப்பு நோக்கி வாகனங்கள் அனுமதிக்கப்படாமல், அல்லிக்குளம் சாலை வழியாக சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் நோக்கி வாகனங்கள் செல்ல மாற்றுப்பாதையில் அனுமதிக்கப்பட்டது.

தற்போது சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் கட்டுமான பணிகள் நிறைவடைந்து விட்டதால், ராஜா சர் முத்தையா சாலையில், ஈ.வெ.ரா. சாலை சந்திப்பிலிருந்து பெரியமேடு மசூதி பாயின்ட் வரை செயல்பட்டு வந்த ஒருவழிப்பாதை தற்போது இருவழிப்பாதையாக மாற்றப்பட்டுள்ளது. இதன்படி, சர் முத்தையா சாலையில் ஈ.வெ.ரா சாலை சந்திப்பிலிருந்து பெரியமேடு மசூதி பாயிண்ட் வரை இரு வழியிலும் வாகனங்கள் அனுமதிக்கப்படும்.

மேலும், தற்போது அல்லிக்குளம் சாலை ஈ.வெ.ரா சாலை சந்திப்பில் மெட்ரோ ரயில் பணிகள் நடைபெற்று வருவதால், அல்லிக்குளம் சாலையானது தற்காலிகமாக ஒருவழிப்பாதையாக செயல்பட உள்ளது. அதன்படி, ஈ.வெ.ரா சாலையிலிருந்து அல்லிக்குளம் சாலை வழியாக சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் நோக்கி வாகனங்கள் அனுமதிக்கப்படும்.

சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து அல்லிக்குளம் சாலையில் ஈ.வெ.ரா சாலை நோக்கி வாகனங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது. அவ்வாகனங்கள், அல்லிக்குளம் சாலை வழியாக பெரியமேடு மசூதி பாயிண்ட்டை சென்றடைந்து சர் முத்தையா சாலை வழியாக ஈ.வெ.ரா சாலையை சென்றடையலாம். மசூதி பாயிண்டிலிருந்து சென்ட்ரல் ரயில் நிலையம் நோக்கி அல்லிக்குளம் சாலை வழியாக வாகனங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.